

உலகம் முழுவதும் சென்று தமிழ் வளர்த்த ஐயா வா.மு.சேதுராமன் அவர்களது உடலுக்கு கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகரராஜா, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு பிரகாஷ், வட்ட செயலாளர் மைக்கேல் மற்றும் கழகத்தினர் உடன் இருந்தனர்.

பகுதிச் செயலாளர் இராசா தலைமையில்

# 128-வது வட்டத்தில் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர் சேர்க்கை!

## ஸ்டெல்லா ஜாஸ்மின் ரத்னா எம்.சி.– மு.கோவிந்தராஜன் பங்கேற்பு

சென்னை, ஜூலை 7 -

கலைஞர் நகர் பகுதி 128-வது வட்டத்தில் 81.வது பாகத்தில் 'ஓரணியில் தமிழ் நாடு' உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழி காட்டுதலின்படி வடக்கு பகுதி கழக செயலாளர் இராசா தலைமையில் விருகம்பாக்கம் வடக்கு பகுதி 128 வது வட்டம் 81வது பாகத் தலைவர் சிவஜோதி BDA ஜெயபிரகாஷ் தொகுதி பார்வையாளர் வே . உமா காந்த் வட்ட கழக செயலாளர் மு. கோவிந்தராஜன். மாமன்ற உறுப்பினர் ஸ்டெல்லா ஜாஸ்மின் ரத்னா ஆகியோர் முன்னிலையில்”ஓரணியில் தமிழ்நாடு” திமுக உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது.

இதில் பகுதி கழக துணை செயலாளர்கள் சா.நாகராஜ். வாட்டர் விஜயகுமார். வடிவேல். தியாகராஜன். ரமேஷ். மகேந்திரன். பிரவீன். விக்கி. உள்ளிட்டடோர் கலந்து கொண்டனர்.

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழக இளைஞரணி சார்பில்

# ' ஓரணியில் தமிழ்நாடு' கழக உறுப்பினர் சேர்க்கை விளக்க தெருமுனைக் கூட்டம்!

## டி.ஆர்.பாலு எம்.பி. - அமைச்சர் தா.மோ.அன்பரசன் - மீனாட்சி சுந்தரம் சிறப்புரை!

காஞ்சிபுரம், ஜூலை 7

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய திமுக இளைஞரணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா ஓரணியில் தமிழ்நாடு கழக உறுப்பினர் சேர்க்கை விளக்க தெருமுனைக் கூட்டம் இன்று (07 07 2025 திங்கட்கிழமை) மாலை 5 மணியளவில் படப்பை பஜாரில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பா.அறிவொளி தலைமை வகிக்கிறார். ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் ஆர்.ஜமீர் வரவேற்புரையாற்றுகிறார்.

ரா.தீபக், மா.சே. பிரகாஷ், பொன் இளைய பாரதி, லோ. சுதாகர், இரா. குமரவேல், சே. பார்த்திபன், ஆர். சையத் ரமிஸ், இ. பாலாஜி ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இக்கூட்டத்தில் தலைமை கழக சொற்பொழிவாளர் காஞ்சி மீனாட்சி சுந்தரம், அமைச்சர் மாவட்ட கழகச் செயலாளர் தா.மோ.அன்பரசன், கழகப் பொருளாளர் திருபெரும்புதூர் நாடாளுமன்ற தொகுதி உறுப்பினர் டி.ஆர்.பாலு,

இளம் பேச்சாளர்கள் ஆ. தா. டெக்சின் ரொமாரியோ, வடக்குபட்டு ச.பேரரசன், பிரபு கஜேந்திரன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இதில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், தொகுதி மேற்பார்வையாளர்கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், ஒன்றிய பெருந்தலைவர்

திருமதி சரஸ்வதி மனோகரன், மத்திய ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் திருமுடி வாக்கம் இ. மணி, வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தே மாதரம்,

உமா மகேஸ்வரி வந்தே மாதரம், கோல்டு டி பிரகாஷ், பேராசிரியர் எல். பிரபு, பா.ராமமூர்த்தி, சங்கீதா வேலு, மு. சுப்பிரமணி, வ. நந்தகோபால், வாசுகி, மகேஷ், சி. பார்த்தசாரதி, வி. ஹரி, மு.ராஜேந்திரன், பா. பரிமேலழகன், எஸ். கர்ணன், ரமேஷ் கவி, கு.ஏழுமலை, லட்சுமி ஞானசேகர், மலர் விழி தமிழமுதன், ச. பாலகிருஷ்ணன், எஸ்.வைரம், ஜி.ஏ. ராயப்பா, கா.தினேஷ், மா. ரேவதி, வி.எஸ். கோதண்டராமன், கே. எம்.சி.சத்தியமூர்த்தி, வி.எஸ்.இளங்கோ, மு. குமார்,

மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், சோபா ரகுநாதன், வி. இருசப்பன், ஏ.இ. பரசுராமன், டி. அசோக்குமார், ஏ.இ. பஞ்சாட்சரம், பா. வேல்முருகன், சா. ரஞ்சித் குமார், இரா. சந்திரசேகர், பா. வீரபாண்டியன், ரா. தமிழ் தாசன், ராணி, விஅன்பு, க. அன்பழகன், லட்சாவதி கருணாகரன், மலர் விழி முருகன், குமுதா சுமன், ராஜலட்சுமி ராஜி, செல்வ மணி, தெ. அரிகிருஷ்ணன், உமா சத்தியமூர்த்தி, சுமதி வைத்தீஸ்வரன், ஷீலா தனசேகரன், கோதைநாயகி வரதன், மீனா மோகன், ஆரிக்கம் ஜெயபால், பி.சுதாகர், சாவித்திரி சந்திரன், தா.தமிழமுதன், வள்ளி சுந்தர், வித்யா ரஞ்சித் குமார், வசந்தி சாம்பசிவம், ஆர். ராஜன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் கா.பா. ஆடலரசு நன்றி கூறுகிறார்.

# திருத்தணி தொகுதி பாகமுகவர்கள் கூட்டம்! ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பங்கேற்பு! திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை!

திருவள்ளூர், ஜூலை 7-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் திருவள்ளூர் மற்றும் திருத்தணி தொகுதிக்குட்பட்ட பிஎல்ஏ 2 பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட நடைபெற்றது. மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ தலைமை தாங்கினார். திருவள்ளூர் சட்ட மன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

இதில் கழகத் துணை பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி, சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா. மு.நாசர் ஆகியோர் கலந்து கொண்டு சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கினார்கள்.

அப்போது ஆ.ராசா எம்.பி. பேசும்போது,

தந்தை பெரியார் காலத்தில் பிஜேபிக்கும் ஆர்.எஸ்.எஸ்.க்கோ ஒரு எம்.பி. கூட கிடையாது. அண்ணா முதலமைச்சராக இருந்தபோது இரண்டு எம்பிக்கள் மட்டுமே இருந்தனர். ஆனால் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது கணிசமாக எம்பிக்கள் இருந்தனர்.

திமுக கூட்டணியில் பிஜேபி இருந்த போது மூன்று நிபந்தனைகள் விதிக்கப்பட்டன அதாவது அயோத்தியில் ராமர் கோயில் கட்டக்கூடாது, இஸ்லாமியர்களுக்கு கிறிஸ்தவர்களுக்கு இந்துக்களுக்கு தனி சட்டம் உள்ளது. இந்த ஒரே சீரான சிவில் சட்டத்தைக் கொண்டு வரக்கூடாது. காஷ்மீரில் கொண்டு வந்ததைப் போல் சிறப்பு அதிகாரத்தை கொண்டுவரக் கூடாது என்ற நிபந்தனைகளுடன் பாஜகவுடன் கூட்டணி அமைத்தோம். ஆர்.எஸ்.எஸ். என்ற பயங்கரவாதம் பெரியார் காலத்தில் இல்லை. அண்ணா காலத்தில் இலேசாகத் தெரிந்தது. கலைஞர் காலத்தில் உருவம் கொண்டது. நம்முடைய முதல்வர் இதனை எதிர்கொண்டு செயலாற்றி வருகிறார்.

தமிழ்நாடு முதல்வராக உள்ள மு.க. ஸ்டாலின் போன்ற தலைவர்கள் உலகத்தில் எங்கும் இல்லை. கட்சியில் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து படிப்படியாக உயர்ந்து கட்சிக்கு தலைவராய் இருக்கிறார். அதே போல் ஆட்சி நிர்வாகத்திலும் சட்டமன்ற உறுப்பினர், மாநகர மேயர், அமைச்சர், துணை முதலமைச்சர் என படிப்படியாக உயர்ந்து தற்போது முதலமைச்சர் ஆகியிருக்கிறார்.

கட்சியிலும் ஆட்சியிலும் படிப்படியாக முன்னேறி தன்னையும் வளர்த்துக்கொண்டு சமூகத்திற்காகவும் தொண்டாற்றி ஒரே நேரத்தில் கட்சியை ஆட்சியையும் ஒரு பரிபூரணமான இடத்திற்கு கொண்டு வந்து தமிழகத்தில் அல்ல இந்தியாவிற்கு ஒட்டுமொத்த தலைவராக திகழ்பவர் மு.க. ஸ்டாலின் என அவர்கள்.

தமிழ்நாட்டில் நீங்கள் கொண்டு வந்த திட்டம் ஒவ்வொரு வீட்டிலும் போய் சேர்ந்திருப்பதால் உங்களை அரசியல்வாதியாக தனக்கு பிடிக்கும் என நீலகிரிரில் ஒரு பெண்மணி கூறியுள்ளார். ஒரே நாடு, ஒரே தேர்தல், ஒரே பண்பாடு எப்படி சாத்தியமாகும்.

நூறாண்டுகளுக்கு முன்னர் இந்த அரங்கத்திற்குள் அனைவரும் சமமாக அமர முடியுமா என்றால் முடியாது. ஆனால் தற்போது அது முடிகிறது என்றால் அதற்கு காரணம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தான்.

டெல்லி, மகாராஷ்டிரா, அரியானாவிலும் பிஜேபி ஆட்சியைப் பிடித்திருக்கலாம். அதேபோல் தமிழ்நாட்டில் பிஜேபி ஆட்சி அமைக்கும் என அமித்ஷா பேசியிருக்கிறார். டெல்லியில் ஒரு தனி மனிதரை வீழ்த்தி, ஒரு அரசியல் கட்சியை வீழ்த்தி உள்ளீர்கள். அதேபோல் மகாராஷ்டிராவிலும் தனிமனிதர், ஒரு அரசியல் கட்சி, அரியானாவிலும் இதே நிலைதான். ஆனால் தமிழகத்தில் இருக்கிற தலைவர் தனி மனிதர் அல்ல. அவருக்கு பின்னால் பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற தத்துவங்கள் இருப்பதால் ஒன்னும் செய்ய முடியாமல் உள்ளது. ஓரணியில் தமிழ்நாடு என்ற திட்டத்தை நமது தலைவர் அறிவித்திருப்பதற்கு காரணம் இந்த தேர்தலில் அரசியல் பார்க்க வேண்டாம்... எங்களோடு வா.. சாதி, மதம் வேண்டாம்.. மானம், மண், மொழி என்ற இந்த மூன்றுக்காகவும் அரசியலில் கடந்து வா என்பது தான். எனவே 2026ல் நடைபெறும் தேர்தல் தமிழகத்திற்கான தேர்தல் மட்டுமல்ல இது ஒட்டு மொத்த இந்தியாவிற்குமான தேர்தல்.

இவ்வாறு ஆ.இராசா பேசினார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம். பூபதி, தொகுதி பார்வையாளர்கள் பெ.சேகர், சண்முகநாதன், நிர்வாகிகள் கே.திராவிடப க்தன், ஒ.ஏ.நாகலிங்கம், குருதாஸ், உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, ப.சிட்டிபாபு, கே.என்.சுப்பிரமணி, ஒன்றிய செயலாளர்கள் டி.கிறிஸ்டி (எ) அன்பரசு, ஆர்த்திரவி, கூளூர் எம்.ராஜேந்திரன், சி.சு.ரவிச்சந்திரன், க.அரிகிருஷ்ணன், மோ.ரமேஷ், எஸ்.மகாலிங்கம் ஜி.ரவிந்திரா, சி.என்.சண்முகம், பெ.பழனி, வி.வினோத்குமார், சி.ஜெ.சீனிவாசன், என். கிருஷ்ணன், பி.டி.சந்திரன், கே.இராஜேந்திரன், மா.இரகு, ஏ.எல்.விஜயகுமார் மற்றும் பிஎல்ஏ 2 பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.



பூவிருந்தவல்லி கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட மேல்பாக்கத்தில் கிளை பொறுப்பாளர் மாவட்ட பிரதிநிதி ஜனார்த்தனன் திருவள்ளூர் மத்திய மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் மு.ராஜாராமன் முன்னிலையில் “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை பேரணி தொடங்கியது. இதில் அருன் ரோகித் கார்த்திக் மற்றும் கிளை செயலாளர் மே.ம.முத்து இளைஞர் அணி தம்பி மற்றும் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இ.என். கிருஷ்ணன்

ஜூலை 7 (2015)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் 3 முறை வட்டக் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய உறுப்பினராகவும், சேமாத்தம்மன் திருக்கோவில் அறங்காவலர் குழு தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

தி.மு.க.

## தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நிரப்பப்படாமல் உள்ள தி.மு.க. தகவல் தொழில்நுட்ப மாநில துணைச் செயலாளர் பொறுப்புக்கு **டாக்டர் அழகு ராஜா** அவர்கள் தலைமைக்கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாநில நிர்வாகிகளுடன் இவர் இணைந்து பணியாற்றுவார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள் : 6.7.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

மாண்புமிகு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் நடைபெறும் “ஓரணியில் தமிழ்நாடு” பரப்புரை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் வகையில்

# திமுக தகவல் தொழில்நுட்ப அணி மண்டலங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு மண்டல பொறுப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. தொழில்நுட்பச் செயலாளர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா அறிவிப்பு!

மாண்புமிகு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலில் நடைபெறும் “ஓரணியில் தமிழ்நாடு” பரப்புரை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தும் வகையில் திமுக தகவல் தொழில்நுட்ப அணி மண்டலங்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு கீழ்க்காணும் வகையில் மண்டல பொறுப்பாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

| மண்டல பொறுப்பாளர் | மாவட்டங்கள் |
|---|---|
| திரு.சி.எச். சேகர் (மாநில துணை செயலாளர்) சென்னை மண்டல பொறுப்பாளர் | திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய, சென்னை கிழக்கு, சென்னை தெற்கு, சென்னை மேற்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை தென் மேற்கு |
| திரு.டாக்டர். ஏ.கே. தருண் (மாநில துணை செயலாளர்) சேலம் மண்டல பொறுப்பாளர் | தருமபுரி மேற்கு, தருமபுரி கிழக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, திருவண்ணா மலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு சேலம் மத்திய, சேலம் மேற்கு, சேலம் கிழக்கு. |
| எஸ்.டி.இசை (மாநில துணை செயலாளர்) வேலூர் மண்டல பொறுப்பாளர் | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, திருப்பத்தூர், இராணிப்பேட்டை, வேலூர் |
| நவின் (மாநில துணை செயலாளர்) நெல்லை மண்டல பொறுப்பாளர் | திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, கன்னியா குமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு. |
| அ.தமிழ்மாறன் (மாநில துணை செயலாளர்) காஞ்சி மண்டல பொறுப்பாளர் | காஞ்சிபுரம் தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, விழுப்புரம் மத்திய, விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு. |
| அ.தமிழ்மறை (மாநில துணைச் செயலாளர்) கோவை மண்டல பொறுப்பாளர் | கோவை மாநகர், கோவை வடக்கு. கோவை தெற்கு, நீலகிரி. |
| பி.கேசவன் (மாநில துணை செயலாளர்) கரூர் மண்டல பொறுப்பாளர் | நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் மத்திய, திருப்பூர் கிழக்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, ஈரோடு மத்திய, கரூர் |
| திரு.எம்.விஜய கதிரவன் (மாநில துணை செயலாளர்) முகவை மண்டல பொறுப்பாளர் | இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, தூத்துக்குடி வடக்கு, தூத்துக்குடி தெற்கு. |
| பி.எம். ஸ்ரீதரன் (மாநில துணை செயலாளர்) தஞ்சை மண்டல பொறுப்பாளர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர் மேற்கு, கடலூர் கிழக்கு. |
| பாச.பிரபு (மாநில துணை செயலாளர்) மதுரை மண்டல பொறுப்பாளர் | திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு, மதுரை மாநகர், மதுரை தெற்கு, மதுரை வடக்கு, தேனி தெற்கு, தேனி வடக்கு. |
| ஏ.கே.அருண் (மாவட்ட ஒருங்கிணைப்பாளர்) திருச்சி மண்டல பொறுப்பாளர் | திருச்சி தெற்கு, திருச்சி வடக்கு, திருச்சி மத்திய, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை
நாள் :6.7.2025

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ.எஸ்.குமாரசாமி

ஜூலை 7 (2004)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு காங்கேயம் பேரூர்ச் செயலாளர், காங்கேயம் ஒன்றியச் செயலாளர் என கழகத்தில் பொறுப்பு வகித்து பணியாற்றியவர்.

காங்கேயம் பேரூராட்சி துணைத் தலைவர், காங்கேயம் கூட்டுறவு நிலவள வங்கி தலைவர் ஆகிய பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.